(ஆ) நந்தன் கால்வாய் திட்டத்தின் மூலம் எத்தனை ஏக்கர் பாசனம் பெறுகிறது?

(இ) அத்திட்டத்திற்கு அரசு எவ்வளவு செலவழித்துள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) தென்னாற்காடு மாவட்ட முகையூர் தொகுதியில் நந்தன கால்வாய்த் திட்டத்தில் பனைமலை ஏரி ஏற்கனவே சேர்க்கப்பட்டு வேலைகள் முடிவடைந்து விட்டன.

(ஆ) நந்தன் கால்வாய் திட்டத்தின் மூலம் 6,654 ஏக்கர் பாசனம் பெறுகிறது.

(இ) இத்திட்டத்திற்காக டிசம்பர் 1978 முடிய செலவழிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1,11,02,079 ஆகும்.

## துறையூருக்கு அருகே புதிய அணைக்கட்டு.

*வினா எண், 594—திரு. கே. சௌந்தரராசன் & திரு. எஸ். வி. இராமசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் துறையூருக்கு அருகில் கொல்லி மலையில் இருந்து வரும் அருவியின் குறுக்கே அணை கட்டி நீர்த்தேக்கம் அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலத்திற்குள் இத்திட்டம் செயல்பட துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் ஆய்வில் உள்ளது.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழில்.

*வினா எண். 595—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழில் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்கான பிரேரணைகள் அரசுக்குக் கிடைத்துள்ளதா?

1979 ஏப்ரல் 2]

(ஆ) ஆம் எனில், எத்தனை கூட்டுறவுச் சங்கங்கள் இது வரை அமைக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பது பற்றிய சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு தொழில் வணிக இயக்குநர் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்.

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத்தலைவரவர்களே, எத்தனை கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரையில் அமைக்கப் பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, கூட்டுறவுப் பணிச் சங்கம் என்பது ஒவ்வொரு சிறு சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கும் மூலப் பொருள்களை வாங்கிக் கொடுப்பதற்கும் அதன் பிறகு ஒவ்வொரு சிறு சிறு தொழிற்சாலைகளும் உற்பத்தி செய்கின்ற தீப்பெட்டிகளை வாங்கி விற்பனை செய்து கொடுப்பதற்குமாக அமைக்கப் பட்டது. எனவே ஒரு கூட்டுறவுப் பணி சங்கம் அமைத்து விட்டாலே சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அந்தப் பகுதியில் பரவலாக வரும். ஹோம் யூனிட் என்று சொல் வார்களே அதுபோல ஒரு பணிச் சங்கத்திற்கு நூறு சிறிய தொழிற்சாலைகள் வீதம் 300, 400 சிறிய தொழிற் சாலைகள் அங்கங்கே ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இதனை ஆராயும்படி நாங்கள் கேட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்ளே, கூட்டுறவுச் சங்கங்கள் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு அமைப்பது போன்று அங்கே ரப்பர் அதிகமாகக் கிடைக்கின்ற காரணத்தால் அதற்கும் இப்படி கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து கிடைக் கின்ற ரப்பரை வைத்து ஒரு தொழிற்சாலை அமைத்து தொழி லாளர்களுக்கு வேலை வாய்ப்பு திட்டத்தை இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

[1979 ஏப்ரல் 2

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, ஏற்கனவே டான்சி நிறுவனம் மூலமாக அங்கே ஒரு ரப்பர் தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே மற்ற சாத்தியக்கூறுகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கன்னியாகுமரி மாவட்டம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இருந்தாலும் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு ஒரு வாய்ப்புத்தருகிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் ; தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ஏராளமாக இப்போது ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. இந்த கூட்டுறவு முறையில் இருக்கின்ற சங்கங்களுக்கு 500 ரூபாய் பணம் கட்ட வேண்டி இருக்கிறது. ஆனால் கதர் கிராமத்தொழில் நிறுவனத்திடமிருந்து வாங்குவதாக இருந்தால் 25 ரூபாய் பங்குத் தொகையாக கட்டினால் போதும் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த கூட்டுறவுச் சங்கங்களிலே கட்டவேண்டியது 500 ரூபாய் என்று இருப்பதையும் 25 ரூபாய் என்ற அளவில் குறைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் 15 பேர்களிலிருந்து 20 பேர்கள் வரையில் வேலை செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 500 ரூபாய் கட்டினால்தான் கச்சாப் பொருட்களை வழங்குகிறார்கள் என்று சொல்வது தனிப்பட்டவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வாங்க முயற்சிப்பது பற்றியது. ஆனால், நான் சொல்வது 100 பேர் என்ற அளவிலே சேர்ந்து கொண்டு கூட்டுறவு முறையின் மூலமாக இந்தத் தொழிலை ஆரம்பிப்பது பற்றியது. ஆனால் ஒவ்வொரு உறுப்பினரும் 25 ரூபாய் ஷேர் காப்பிடல் கட்டி கூட்டுறவு முறையில் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது ஒரு முறை. ஆகவே இரண்டு முறைகள் இருக்கின்றன. ஆகவே அங்கே இதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நாம் சிறப்பாக செயலாற்றிக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.